OS. 22/2024

நாள். 05.03.2026.

பி.வா.சா. 1 – பாலச்சந்திரன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

என் அப்பா என்ன வேலை பார்த்தார் என்றால் விவசாயம். என் அப்பா சொந்த நிலங்களில்தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தியாகராஜன் என்ன வேலை செய்து வந்தார் என்றால் விவசாயம். நான் வாதியிடம் மீதிகிரைய தொகையை கொடுத்து சொத்தை பதிந்து கொள்ளும்படி கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டேன். நான் எப்போது கேட்டேன் என்றால் கிரைய அக்ரிமென்ட் ஏற்பட்ட ஒரு மாதத்தில் கேட்டேன். 1 முதல் 3 பிரதிவாதிகளும், முத்துமாரியும் சேர்ந்து வாதியின் வீட்டிற்கு சென்று கேட்டோம். வாதி என்ன சொன்னார் என்றால், பேச்சு வார்த்தைக்கே வரவில்லை, காலத்தை இழுத்துக்கொண்டே வந்தார். நான் மீதிபணத்தை கொடுத்து கிரையம் பதிந்து கொள்ளுமாறு வாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு என் தகப்பனார்தான் விவரம் கூறினார் என்றால் சரியல்ல, நான்தான் கூறினேன். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கு நான்தான் விவரம் சொன்னேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் பக்கம் 2, பாரா 6ல் 2ம் பிரதிவாதி என் பெயருக்கு செட்டில்மென்ட் எழுதிகொடுத்த பிறகு அவரது தனிப்பட்ட செலவுக்காக என்னிடம் பலமுறை பணம் பெற்றுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பணம் கேட்டபோதெல்லாம் நான் பணம் கொடுக்காததால் வாதியுடன் சேர்ந்து கொண்டு கிரைய ஒப்பந்தத்தில் பணம் பெற்றதாக மேல்குறிப்பு செய்திருக்கலாம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் வாதியிடமிருந்து என் அப்பா பணம் வாங்கிக்கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரிக்கும்போது வாதியிடம் என் அப்பா பணம் வாங்கியிருக்கலாம், அந்த விவரம் எனக்கு தெரியாது என சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 24.02.2022ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட குற்றபிரிவு போலிசார் என்னையும், வாதியையும் விசாரித்த பிறகு நான் வாதியை பார்த்ததில்லை என்றால் சரிதான். இராமநாதபுரம் மாவட்ட குற்றபிரிவு போலிசார் என்னை விசாரித்த பிறகும்,

நான் வாதியை அணுகி மீதி கிரைய தொகையை கொடுத்து கிரையத்தை பதிந்து கொள்ளுமாறு கேட்டேன் என எனது பிராமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளது தவறு. நான் வாதியிடம் கிரையத்தை முடிக்க முன்வராததால் நான் என் சகோதரிக்கு (4ம் பிரதிவாதி) இனாம் எழுதிக்கொடுக்கப்போகிறேன் என தெரிவித்தாக எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 9ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் 07.12.2023ம் தேதி என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகுதான் நான் என் சகோதரிக்கு 13.02.2024ம் தேதி இனாம்செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். இனாம்செட்டில்மென்ட் எழுதிக் கொடுப்பதற்கு முன்பே வாதி தாவா வழக்கை எங்கள் மீது தாக்கல் செய்துவிட்டார் என்றால் தெரியாது. நானும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து பணத்தை வாங்கிக்கொண்டு வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் என் சகோதரியான 4ம் பிரதிவாதிக்கு இனாம்செட்டில்மென்ட எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான், என் சகோதரிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செல்லாது என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நாங்கள் அனைவரும் தவறான எதிர்வாதத்தை முன்வைத்து வழக்கு நடத்திவருகிறோம் என்றால் சரியல்ல, அதனால் வாதி செலுத்திய ரூ.35 இலட்சத்தை நாங்கள் திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. பிராதுப்படி வாதிக்கு அவர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.